**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 340** **நாள்:29.07.2026**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டம், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாட்டினை சரிபார்க்கும் பணி (EVM Checking & Verification process) இன்று தொடங்கியது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டம், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் விண்ணப்பத்தின்படி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள் மற்றும் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களின் செயல்பாட்டினை சரிபார்த்தல் பணியின் (EVM Checking & Verification process) தொடக்கமாக, இதில் இன்று (29.07.206) இரண்டு வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாட்டினை சரிபார்க்கும் பணியானது (EVM Checking & Verification process), சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் வேட்பாளரின் முகவர் முன்னிலையில் சென்னை சிந்தாதரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்புக் கிடங்கு அறையில் நடைபெற்றது.

கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ்.சாந்தி, மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா.பூஷ்ணாதேவி மற்றும் தேர்தல் அலுவலர்கள் இந்த இயந்திரங்கள் சரிபார்க்கும் பணியில் பங்கேற்றனர். இதர வேட்பாளர்களின் முகவர்கள் பார்வையாளர்களாக பங்கேற்றனர்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 286 வாக்குச்சாவடிகளில் 5 சதவீதம் அளவில் என வேட்பாளரால் தேர்வு செய்யப்பட்ட 14 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்திய வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள் மற்றும் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் ஆகியவற்றின் செயல்பாட்டினை சரிபார்த்திடும் நடவடிக்கைகள் இன்று தொடங்கப்பட்டு, தினசரி 2 வாக்குப்பதிவு இயந்திரங்கள் என இன்று (29.07.2026) முதல் 04.08.2026 வரையிலான 7 நாட்களில் 14 வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்க்கும் பணி காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை மேற்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**